**சி.சி .எண். 375/2018 நாள்– 13.03.2026 பக்கம் 660/2024**

**ம.சா .2. பழனியம்மாள் க/பெ.மணி**

**எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசபடி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**M.P 22/2025 கடந்த 15.10.2025 அன்று மனு அனுமதிக்கப்பட்டு எதிரிதரப்பில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.**

நான் இந்த வழக்கை தவிர எதிரிகள் மீது தாக்கல் செய்யப்பட்ட உரிமையியல் வழக்குகளிலும், சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கான அனுபவம் உள்ளது என்பதால் நீதிமன்றத்தில் எவ்வாறு சாட்சியம் அளிக்கவேண்டும் என்று தெரியும். ஆஜர் 1ம் எதிரிக்கும், எங்கள் குடும்பத்திற்கும், இந்த வழக்கு தாக்கல் செய்தவதற்கு முன்பாக எத்தனை வருடமாக பிரச்சனை என்றால் சுமார் 6 மாதத்திற்கு முன்பிருந்து பிரச்சனை இருந்தது. ம.சா.ஆ.1 O.S.NO.57/2015 வழக்கின் பிராதில் கண்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

ம.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட உத்தரவு எதற்கானது என்றால், வேலி அமைப்பதற்காக கொடுக்கப்பட்ட உத்தரவு. ம.சா.ஆ.2 உத்தரவு தேதியன்று, ம.சா.ஆ.2 ல் கண்ட சொத்தில் வேலி இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.2 ல் வேலி அமைப்பதற்காக பெறப்பட்ட உத்தரவு இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட நீதிமன்ற உத்தரவு படி வேலி அமைக்கும்போது, ஏற்பட்ட பிரச்சனைக்கானது தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு புகாரானது எனது கணவரால் தாக்கல் செய்யப்பட்டது.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2 , கரூர்.**

இந்த வழக்கு புகாரில் என்ன விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால், தெரியும். இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி, மாதம், வருடம் தெரியுமா என்றால், தேதி ஞாபகமில்லை, மாதம் வைகாசி மாதமாக இருக்கும். O.S.NO.57/2015 நிர் வழக்கு எனது கணவரால் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். **அந்த வழக்கு தீர்ப்பின் சான்றிட்ட நகல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

எனது கணவர் காதர் பாட்ஷா மற்றும் 1ம் எதிரியின் மீது, தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு சிவில் வழக்கு கரூர் மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில், O.S.NO.394/2015 நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கில் 1ம் எதிரி தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். **மேற்படி நிர் வழக்கின் பிராது மற்றும் 1ம் எதிரியின் எதிர் வழககுரையின் சான்றிட்ட நகல் எ.சா.ஆ.2 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

எனது கணவர் மீது 1ம் எதிரி தாக்கல் செய்யப்பட்ட சிவில் வழக்கு கரூர் மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில், O.S.NO.508/2015 நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கில் எனது கணவர் எதிர் உரை தாக்கல் செய்துள்ளார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2 , கரூர்.**

எங்களது சொத்திற்கும் 1ம் எதிரியின் சொத்திற்கும், அத்துக்கல் உள்ளதா என்றால் உள்ளது. அதனை 1ம் எதிரி பிடிங்கி தள்ளி நட்டு விட்டார். 1ம் எதிரி அத்துக்கல்லை பிடிங்கி நட்டதாக நான் சொல்லும் நிலையில் அதனை நான் நேரடியாக பார்த்தேனா என்றால், நான் பார்க்கவில்லை எனது அம்மா பார்த்தார்.

அத்துக்கல்லை 1ம் எதிரி எப்போது பிடிங்கினார் என்றால், பிரச்சனை சமயத்தில் போது தான் பிடிங்கி நட்டார். அத்துக்கல்லை 1ம் எதிரி பிடிங்கியது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால், நான் எதுவும் கொடுக்கவில்லை. இந்த வழக்கு பிரச்சனைக்கு பின்னர், சுமார் 2 நாட்கள் கழித்துதான் அத்துக்கல் 1ம் எதிரியால் பிடுங்கப்பட்டது.

அத்துக்கல்லை 1ம் எதிரி பிடுங்கவில்லை என்றாலும் எங்களது சொத்திற்கும், 1ம் எதிரி சொத்திற்கும், இடையே பிரச்சனை நடந்த சமயத்தில் வேலி இல்லை என்று சொன்னால், சரியல்ல. வேலி அமைப்பதற்கு எனது கணவர் உட்பட அவரது நண்பர்கள் இருவர், செயல்பட்டனர். அந்த நண்பர்கள் பெயர் என்னவென்றால், குணசேகரன் அவர் எனது கணவரின் லாரியில் கிளீனராக இருந்தார். மற்றொரு நபரின் பெயர் எனக்கு தெரியவில்லை.

அந்த குணசேகரன் தற்போது, ஊரில் உள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குணசேகரன் எனது கணவரிடம் 4 வருடமாக கிளீனராக இருந்து வந்தார்.

ஒம்/−எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2 , கரூர்.**

வேலி அமைக்கும் சமயத்தில், நானும், எனது தாயாரும் சம்பவ இடத்தில் இல்லை என்றால், வீட்டிற்குள் இருந்தோம், சத்தம் கேட்டு வெளியே வந்தோம்.

நான் வெளியே வந்தபோது சம்பவ இடத்தில் வழக்கறிஞர் பாஸ்கரன் உள்ளிட்ட 10–ற்கும் மேற்பட்ட நபர்கள், இருந்தார்களா என்றால் இல்லை. அந்த வழக்கறிஞர் அந்த இடத்திற்கு வந்தாரா என்றால், சம்பவத்திற்கு பின்னிட்டு பாஸ்கரன் ஜீப்பில் அந்த வழியாக வந்தார்.

எனது வீட்டிற்கும், 1ம் எதிரி வீட்டிற்கும், சம்பவம் நடைபெற்ற இடத்திற்கும் அருகில் வீடுகள் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி பகுதி போக்குவரத்து மற்றும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் சுமார் 20 முதல் 30 நபர்கள் இருந்தார்களா என்றால், நூற்றுக்கணக்கான நபர்கள் இருந்திருப்பார்கள்.

எனது முதல் விசாரணையில் நான் சாட்சியம் அளித்தவாறு, எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வேலி அமைக்க முற்பட்டதாக சொல்லப்படும் நிலையில், எத்தனை குழிகள் அமைக்கப்பட்டது என்றால் ஒரு குழி போடும் போது பிரச்சனை ஆரம்பித்துவிட்டது.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2 , கரூர்.**

**மேற்கொண்டு விசாரணை செய்வது சம்மந்தமான ஆவணங்களில் சான்றிட்ட நகல் கோரி C.A.No. 9934/2025 நீதிமன்றத்தில் 29.10.2025 எண்ணின்படி மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி ஆவணங்கள் கிடைக்கப்பெறாததால், கால அவகாசம் கோரி எதிரி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்
**நீதித்துறை நடுவர் எண்.2 , கரூர்.**